காட்சியும் **மறுநாள் வியாழன்** அன்று **யாளி** வாகனத்தில் ஸ்ரீசெல்வமஹாகாளி அம்மனும் **குதிரை**வாகனத்தில் ஸ்ரீபால்குளத்தி அம்மனும் வீதிஉலா வரும் காட்சியும் இறுதியாக இரண்டு அம்பிகைகளும் மண்ணடி என்ற மைதானத்தில் **முன்னோட்டம் பின்னோட்டம்** ஓடி வரும் காட்சியும் காண்பவர்க்கு கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தத் திருவிழா சமயம் அனைவரது வீட்டிற்கும் வெளி ஊர்களிலிருந்து உறவினர்களும் நண்பர்களும் வந்து தங்கியிருந்து திருவிழாவினை கண்டு களித்து அம்மன் அருளைப் பெற்று செல்வது வழக்கம். அனைவருக்கும் தங்கும் இடம், அன்னதானம் முதலியன அளித்து உள்ளூர்வாசிகள் உபசரிக்கும்விதம் மிகவும் பெருமையாக இருக்கும்.

இது தவிர சிவன் கோவிலில் பிரதி வருஷம் நவராத்திரி சமயம் 9 நாட்கள் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரமும் பங்குனி மாதம் ஸ்ரீ சங்கரபார்வதி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாஸ நாதஸ்வாமிக்கு திருக்கல்யாண உத்ஸவமும், ஊஞ்சல் உத்ஸவமும் விமர்சையாக நடைபெறுகிறது. ஆனித் திருமஞ்சனம் சமயம் அபிஷேக ஆராதனைகளுடன் விசேஷ பூஜைகளும், பிரதோஷ புண்யகாலத்தில் ஸ்ரீநந்திகேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகமும், ஸ்ரீ பிரதோஷ நாயகர் புறப்பாடும், பிரதி கிருத்திகை அன்று ஸ்ரீ வல்லீதேவஸேனா ஸமேத ஸ்ரீ ஷண்முகருக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனையும், சங்கடஹர சதுர்த்தியன்று ஸ்ரீவிநாயகருக்கு விமர்சையாக அபிஷேக ஆராதனைகளும், சித்திரை மாதம் ஸ்ரீபால்குளத்தி அம்மனுக்கு வஸந்தாபிஷேகமும், ஸ்ரீ கம்பகாமாக்ஷி அம்மனுக்கு 10 நாள் உத்ஸவமாக **(திருவிழா)** சுவாமிப் புறப்பாடும், ஸ்ரீ திரௌபதி அம்மனுக்கு வருஷா வருஷம் **மஹாபாரதம்** சொற்பொழிவுடன் **ஸ்ரீ அரவன் சிறப்பு வழிபாடும், தீமிதித் திருவிழா**வும் வெகுவிமர்சையாக நடந்து வருகின்றன. இதைத் தவிர சித்திரை மாதத்தில் ஸ்ரீ செல்வ மஹாகாளி அம்மனுக்கு கோடை அபிஷேகமாக ஆயிரக்கணக்கான லிட்டர் பால் குடங்களில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு அபிஷேகமும், ஸ்ரீ சண்டி ஹோமமும் சிறப்பாக நடந்து வருகின்றன.

## வேத வித்துக்களும் பண்டிதர்களும்

இத்தனை அழகிய உடையாளூர் கிராமம் என்ற கிரீடத்திற்கு கற்கள் பதிக்கப்பட்ட மாதிரி யஜுர்வேதம் ஸாம வேதம் என்று இரண்டு வேதத்திலும் பாண்டித்யம் பெற்ற வேதவித்துக்கள் சென்ற நூற்றாண்டில் நிறைந்திருந்தனர். யஜுர் வேத விற்பன்னர்களான **ப்ரம்ஹஸ்ரீ அப்புவாத்யார்,** அவரது புதல்வர் **ஸ்ரீஸுந்தரேச தீக்ஷிதர், ப்ரம்ஹஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கனபாடிகள்,** ஸாமவேதிகளான **ப்ரம்ஹஸ்ரீ ராஜம் வாத்யார், ப்ரம்ஹஸ்ரீ குஞ்ஜான் வாத்யார்** மற்றும் **புதுவாத்யார்** என்று அழைக்கப்படும் **ஸ்ரீராமையா தீக்ஷிதர்** போன்ற மஹான்களும் இருந்து அனைத்துவிதமான வைதீக ஸத்காரியங்களையும் செவ்வனே நடத்திக் கொடுத்துள்ளார்கள். நித்ய அக்னிஹோத்ரியான **ஸோமயாஜி** என்று அழைக்கப்படும் ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தரேச தீக்ஷிதர் அவர்கள் உடையாளூரில் வாசம் செய்து வந்த காலத்தில் பசுபந்தம், ஸோமயாகம், கருட சயனம் போன்ற மஹோன்னதமான யாகாதி யக்ஞங்களை செவ்வனே நடத்திக் கொடுத்து கிராமத்தின் புகழை உயத்தியிருக்கிறார். இந்த வேதவிற்பன்னர்கள் அனைவரும் பகவத் சரணத்தை அடைந்துவிட்டாலும், தற்போது அக்ரஹாரத்தில் வசித்து வரும் யஜுர்வேதிகளான **ப்ரம்ஹஸ்ரீ S.நாராயண ஸ்வாமி சாஸ்திரிகள், ஸ்ரீ K. வைத்யநாத கனபாடிகள்** மற்றும் ஸாமவேதியான் **ஸ்ரீ N.ராமதுரை சர்மா** ஆகியோர் வைதீக கார்யங்களை நடத்திக் கொடுத்து வருகிறார்கள்.

## ஸ்ரீ ராஜராஜ சோழன்

உடையாளூர் கிராமத்திற்கு அருகில் உள்ள **பழையறை** என்ற கிராமத்தில் தனது அரண்மனையை அமைத்துக் கொண்டு கி.பி. 985 முதல் 1014 வரை தஞ்சையை ஆண்டு வந்த இரண்டாம் கேஸரிவர்மன் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ராஜராஜ சோழனுக்கு சிவபாதசேகரன் என்ற முக்கியமான பெயரும் உண்டு. பழயறை கிராமத்திற்கு அருகில் சோழ ராஜாவின் படைகள் இருந்த ஊர்களான பம்பப்படையூர் மற்றும் ஆரியப்படையூர் ஆகிய ஊர்களும், அரண்மனை நுழைவாயிலாக இருக்கும் நுழையூர் என்ற கிராமம் தற்போது மருவி முழையூர் என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீராஜராஜ சோழன் பூஜித்த சிவலிங்கம் இந்த ஊர் சிவன் கோவிலில் உள்ள நவக்கிரகங்களுக்கு அருகில் தனி சன்னதியில் இருப்பதையும் தரிசனம் செய்யலாம். ஆதலால் **சிவபாதசேகரன்** எனும் ஸ்ரீராஜராஜ சோழன் பூஜை செய்து வழிபட்ட ஸ்தலம் என்பதால் இந்த ஊருக்கு **சிவபாதசேகரமங்கலம்** என்ற பெயரும் ஏற்பட்டது. சோழவம்சத்தின் மிகச்சிறந்த அரசனான இந்த **ஸ்ரீராஜராஜ சோழனின் ஸமாதி** உடையாளூரின் வடக்கு புறமாக ஸ்ரீ செல்வமஹாகாளி அம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் பள்ளிப்படை என்று வழங்கப்பட்டு வந்த **ஓட்டத் தோப்பு** என்ற இடத்தில் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களால் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டறியப்பட்டு சிவலிங்கம் பிரதிஷ்டையுடன் சிறிய மண்டபமாக காட்சி அளிக்கிறது. கிராமத்திற்கு வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்கள் தவறாமல் ஸ்ரீ ராஜராஜ சோழனின் ஸமாதியையும் சென்று தரிசித்து வருகிறார்கள்.

## ஊரைச் சுற்றி அமைந்துள்ள முக்கிய ஸ்தலங்கள்

உடையாளூருக்கு தென்கிழக்கு மூலையில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் பிரசித்திபெற்ற வலங்கைமான் வரதராஜம்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் கோவிலும், தென்மேற்கு மூலையில் 2 கிலோ மீட்டர் தூரத்தில் பட்டீஸ்வரம்